பாராட்டியிருக்கின்றார்கள். அதற்காகவும் நான் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்சாரி, மாண்புமிகு உறுப்பினர்கள் உங்களுடைய உரையைச் சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று கேட்டார்கள். நீங்கள் வைத்த கடைசி கோரிக்கையில் எல்லோரும் ஆவலாக, உங்களை மேலும் பேசச் சொல்கிறார்கள். சீக்கிரம், முடியுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த சபை உறுப்பினர்களுடைய ஆதரவோடு என் கோரிக்கையை உங்கள் முன்னால் வைத்திருக்கிறேன். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் என்னுடைய கோரிக்கையை ஆதரித்ததற்காக எனது நன்றிகளைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

12. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 24–3–2017 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32–ஐ 24–3–2017, வெள்ளிக்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, 24–3–2017 அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–3–2017) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

36. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் நாற்பத்தைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

37. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—